# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற அவசரக் கூட்டம்

**2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ம் நாள் வியாழக்கிழமை மாலை 05.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**நாள்: 06.02.2020**

---

**பொருள் எண். 1**

இந்நகராட்சியில் 14வது நிதி குழு ஆணையத்தின் பரிந்துரை மான்யம் 2019–20ன் கீழ் ரூ.236.58 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட விபரப்படி 7 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றதையடுத்து ஒப்பந்ததாரர்களின் விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு மதிப்பீட்டு தொகையுடன் ஒப்புநோக்கப்பட்டதின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பெருமாளகரம் ஏரிக்கரை சாலைக்கு தார்தளம் அமைத்தல் | 40.00 | **Thiru.P.Chandran,** No.27, Annai Therasa Street,Golden Gorge Nagar, Nerkundram, Chennai - 600 107<br>**M/s.Sri Chelliamman & Co** No:43,Jawahar Nagar, Goundampalayam, Coimbattur-641030 | 4.96 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br>8.40 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |
| 2. | பெரியார் நகர் பிரதான சாலைக்கு தார்தளம் அமைத்தல். | 25.00 | **Tmt.V.Meenal** C-Block, 4G, Yugakalpataru, No.80, Pillaiyar Koil Street, Padikuppam Road, Koyambedu, Chennai-600 107<br>**M/s.Sri Chelliamman & Co** No:43,Jawahar Nagar, Goundampalayam, Coimbattur-641030 | 4.96 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br>18.28 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |
| 3. | ஸ்ரீமுகாம்பிகை நகர் பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை, 5வது பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 45.00 | **Thiru.B.Loganathan** No:1/85,School street, Arumbakkam village, Mannavedu post, Tiruvallur – 602021<br>**M/s.J.M.Construction** No.166, Hareram Nagar, Rajajipuram, Tiruvallur-602001 | 4.89 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br>6.97 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 4. | அசோக் நந்தவனம் 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 37.00 | **Thiru.B.Loganathan**<br>No:1/85,School street,<br>Arumbakkam village,<br>Mannavedu post,<br>Tiruvallur – 602021<br><br>**M/s.J.M.Construction**<br>No.166, Hareram Nagar,<br>Rajajipuram,<br>Tiruvallur-602001 | 4.89 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br><br>6.99 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |
| 5. | சுந்தரசோழபுரம் பிரதான சாலை (யாதவர் தெரு முதல் அரசு மேல்நிலைப்பள்ளி வரை) தார்தளம் அமைத்தல். | 47.00 | **Thiru.U.R.Subramanian,**<br>No.10, Vinayakapuram,<br>Main Road, Ambattur,<br>Chennai – 600053<br><br>**Thiru.P.Chandran,**<br>No.27, Annai Therasa Street,Golden Gorge Nagar,<br>Nerkundram, Chennai - 600 107 | 4.96 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br><br>8.46 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |
| 6. | சுந்தரசோழபுரம் பிரதான சாலை (அரசு மேல்நிலைப்பள்ளி முதல் பருத்திப்பட்டு வரை) தார்தளம் அமைத்தல். | 29.58 | **Thiru.KS.Janarthanam**<br>No:5/9,Second street,<br>Mahalakshmi Nagar,<br>karampakkam, Porur,<br>Chennai-600116<br><br>**Thiru.P.Chandran,**<br>No.27, Annai Therasa Street,Golden Gorge Nagar,<br>Nerkundram, Chennai - 600 107 | 4.87 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br><br>7.97 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |
| 7. | அரவிந்த நகர் பிரதான சாலைக்கு தார்தளம் அமைத்தல். | 13.00 | **Thiru.S.Nithiyanantham**<br>No:39, Perumalkoil street,<br>Melayanampakkam,<br>Chennai-600095<br><br>**Thiru.P.Chandran,**<br>No.27, Annai Therasa Street,Golden Gorge Nagar,<br>Nerkundram, Chennai - 600 107 | 4.93 % மதிப்பீட்டை விட அதிகம் (L1)<br><br>9.02 % மதிப்பீட்டை விட அதிகம் (L2) |

மேற்படி ஒவ்வொரு பணிகளுக்கும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L1 ஒப்பந்ததாரர்கள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்ததை தொடர்ந்து, நகராட்சி மூலம் விலைகுறைப்பு செய்து தர கோரியதில் ஒப்பந்ததாரர் தற்போதைய கட்டுமான பொருட்களின் சந்தை விலை, இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்களின் உள்ளூர் தினக்கூலி ஆகியவை அதிகமாக உள்ள காரணத்தால் விலைக்குறைவு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :-</u>**

அ) மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒவ்வொரு பணிகளுக்கும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த L1 ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.2.7.2.ன்படி நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டு மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளுக்கு மதிப்பீட்டு தொகை விட கூடுதலாகும் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.996 நாள்.06.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண். 2

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 145.00 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் தெருக்குழாய்களின் வழியே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் தற்போது நகராட்சியின் மூலம் அனேக இடங்களில் நிரந்தர வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக மழைநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெறும் போது சாலைகளின் குறுக்கே சிறுபாலங்கள் அமைத்தல் மற்றும் சாலையோரம் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளால் குடிநீர் குழாய்கள் பழுதடையும் சுழல் உள்ளது. எனவே, அவ்வப்போது பழுதுகளின் குடிநீர்குழாய்கள் மற்றும் பொதுக்குழாய்களை ஒரு வருட காலத்திற்கு உடனுக்குடன் பழுதுபார்க்கவும் அதற்காக ஆகும் செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.997 நாள்.06.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 145 ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு ஆழ்துளை குழாய் கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து ஒரு வருட காலத்திற்கு பழுது நீக்கி பராமரித்து சீராக குடிநீர் விநியோகம் செய்திடவும், அதற்காக ஆகும் செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.998 நாள்.06.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதியின் கீழ் கீழ்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 17 | கஸ்தூரிபாய் அவென்யூ 1வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 27.00 |
| 2. | 17 | கஸ்தூரிபாய் அவென்யூ 2வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 30.00 |
| 3. | 17 | கஸ்தூரிபாய் அவென்யூ 3வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 18.00 |
| 4. | 10 | கேந்திரிய விஹார் 1வது பிரதான சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல். | 45.00 |
| 5. | 4 | ஐஸ்வர்யா நகர் 1வது பிரதான சாலை, பாரதியார் 2வது குறுக்கு தெரு மற்றும் பாரதியார் 3வது குறுக்கு தெருவிற்கு தார்தளம் அமைத்தல் | 42.00 |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்.999 நாள்.06.02.2020

தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.

---

## பொருள் எண். 5

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதியின் கீழ் கீழ்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 1 | 1வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |
| 2. | 2 | 2வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 9.10 |
| 3. | 3 | 3வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 2.30 |
| 4. | 5 | 5வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.90 |
| 5. | 6 | 6வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 |
| 6. | 7 | 7வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.90 |
| 7. | 11 | 11வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 |
| 8. | 14 | 14வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 |
| 9. | 15 | 15வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 6.90 |
| 10. | 16 | 16வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 |
| 11. | 17 | 17வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 |
| 12. | 18 | 18வது வார்டு பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 4.60 |
| 13. | – | திருவேற்காடு நகராட்சிக்கு புதியதாக 5HP திறன் கொண்ட மின்மோட்டார்கள் மற்றும் மின் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல். | 5.30 |

அலுவலக குறிப்பு :-

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்.1000 நாள்.06.02.2020

தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.

---

## பொருள் எண். 6

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதியின் கீழ் கீழ்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | – | நூம்பல் அகதீஸ்வரன் கோயில் அருகில் உள்ள சமுதாய கழிப்பறை கட்டிடத்தில் பழுது பார்த்து மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.50 |
| 2. | – | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பசுமை உரக்குடில்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்தல். | 4.50 |
| 3. | 1 | மேல்அயனம்பாக்கம் ராம் பூர்னா நகர் பகுதிக்கு தார்தளம் அமைத்தல். | 10.00 |
| 4. | 3 | கீழ்அயனம்பாக்கம் யாகவா மங்கள் ராஜ் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் மற்றும் கீழ்அயனம்பாக்கம் யாகவா மங்கள் ராஜ் தெரு, இந்திரா காந்தி தெரு, அனுகு சாலை மற்றும் மாந்தோப்பு சாலையில் குடிநீர் குழாய் அமைத்தல். | 6.00 |
| 5. | 12 | அம்மன் நகர் 2வது தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 8.40 |
| 6. | 12 | அம்மன் நகர் குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 3.00 |
| 7. | 18 | கோலடி லட்சுமி நகர் 3வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 3.40 |
| 8. | 15 | சூரியநாராயணன் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 6.50 |
| 9. | 15 | சக்திவேல் நகர் பிரதான சாலை, 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு மூடுபலகைகள் அமைத்தல். | 9.20 |
| 10. | 15 | சக்திவேல் நகர் பகுதியில் உள்ள குறுக்கு தெருக்களுக்கு மூடுபலகைகள் அமைத்தல். | 3.00 |
| 11. | 14 | கனகதுர்கா நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 6.20 |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1001** **நாள்.06.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 28.02.2020**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

## பொருள் எண். 1

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1002** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

## பொருள் எண். 2

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான பிப்ரவரி 2020 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1003** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

## பொருள் எண். 3

இந்நகராட்சியில் பிப்ரவரி 2020ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1004** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

## பொருள் எண்.4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கோலடி இடுகாட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் கட்டட பணி முழுமையாக முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.152, நாள்.27.02.2015–ன்படி நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணி மேற்கொள்ள M/s.Srikalai Environment Education & Health Trust, No.11/26 Balaji Colony Main Road, Velachery, Chennai-600042. என்ற தனியார் அறக்கட்டளை மூலம் பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள **24.04.2015** முதல் **24.04.2020** வரை ஐந்தாண்டுகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பணிக்காலம் **24.04.2020–**வுடன் முடிவடைவதால் மேற்படி பணிக்காலத்தினை நீட்டிப்பு செய்து வழங்கிடுமாறு M/s.Srikalai Environment Education &

Health Trust நிறுவனத்தாரர் மூலம் வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மேற்கண்ட M/s.Srikalai Environment Education & Health Trust நிறுவனத்தாரர் அவர்கள் ஐந்து ஆண்டுகள் நல்லமுறையில், எவ்வித புகார்களுக்கும் இன்றி பராமரிப்பு பணி மேற்கொண்ட வகையில் அதே ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஏற்கனவே விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1005** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.5

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**30322/2012/இ3**, எண்ணிட்ட **15.02.2020** ஆம் தேதிய கடிதத்தில் நகர் நிர்வாக வளாக கட்டிட சங்கத்திற்கு (Urban Administrative Building Society) நகராட்சி நிர்வாக அலுவல கட்டுமான பணி பங்களிப்பு தொகையாக தேர்வு நிலை நகராட்சிக்கு **4**வது தவனைத் தொகையாக ரூ.**551110/–** என நிர்ணயம் செய்தும் மேற்படிய தொகையினை நகர் நிர்வாக வளாக கட்டிட சங்கம் கணக்கிற்கு வழங்கிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படிய தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படிய தொகையினை வழங்கியதையும், இதற்கான செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1006** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.6

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அங்கன் வாடி மையங்களை தமிழக முதல்வர் அவர்களின் **110** விதியின் கீழ் அறிவிப்பின் மூலம் பழுது நீக்கம் செய்து புதுப்பித்து தர கோரி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.**4035/2019/அ2** நாள்.**31.01.2020–**ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்அயனம்பாக்கம் இந்திரா நகர் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு தரைக்கு டைல்ஸ் பதித்தல், சுவருக்கு கலர் வண்ணம் அடித்தல், அரைக் கதவு (Half door) அமைத்தல், மின்விசிறி மற்றும் டியூப் லைட் அமைத்தல் போன்ற அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள ரூ.**2.00** இலட்சத்திற்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி திட்டத்தின் அவசியத்தினை கருதி மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் ஒப்புந்தப்புள்ளி கோரி பணி தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் கூடுதலாகும் செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1007** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.7

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி **2019–20**ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள **12.02.2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 3 | கீழ்அயனம்பாக்கம் கீசன் நகர் 1வது தெரு பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 8.70 | திரு.N.செல்வராஜ்<br>M/s.MSM எண்டர்பிரைசஸ் | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.45 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 3 | கீழ்அயனம்பாக்கம் வெள்ளாளர் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 9.90 | M/s.ஸ்ரீராஜம் பில்டர்ஸ்<br>திரு.J.இளங்கோ | 0.14 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.65 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | 8 | நூம்பல் ஏரிக்கரை தெருவில் நகராட்சிக்கு சொந்தமான பொது கிணறு அமைந்துள்ள இடத்தினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல். | 9.50 | M/s.K.B. கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>திரு.M.கார்த்திக் | 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>3.09 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | 9 | புளியம்பேடு பிள்ளையார் கோயில் தெரு மற்றும் குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 9.00 | M/s.RMS கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>M/s.S.V சுவாமி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டு சதவீதம்<br>7.94 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | 15 | அபிராமி நகர் 1வது தெரு மற்றும் 2வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 9.70 | திரு.K.S.ஜனார்த்தனம்<br>திரு.J.வெங்கடேசன் | 0.09 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.23 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | 16 | காடுவெட்டி பசுமை உரக்குடிலுக்கு கூடுதல் வசதி பணிகள் மேற்கொள்ளுதல். | 2.40 | M/s.வனஜா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>திரு.G.விஜயகுமார் | 0.39 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.50 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 7. | 18 | கோலடி நவீன எரிவாயு தகன மையத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | 3.20 | M/s.வனஜா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>திரு.G.விஜயகுமார் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.00 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | – | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பருவமழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக செப்பனிடுதல். | 9.90 | திரு.S.நித்தியாணந்தம்<br>திரு.P.சந்திரன் | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 9. | – | திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் உள்ள நிகழ்விட உரக்குடில்களில் (Onsite Compost Centre) அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | 4.25 | திரு.P.ரகு<br>திரு.J.இளங்கோ | 0.16 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.93 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 10. | – | வடநூம்பல் பிரதான சாலை மற்றும் பாரதி நகர் பிரதான சாலையில் வேகத்தடை அமைத்து அடையாள பலகைள் பொருத்துதல். | 2.50 | திரு.G.மதிவேலன்<br>திரு.K.அருண்குமார் | 0.14 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.10 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 11. | – | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி சொந்தமான கைவிடப்பட்ட ஆழ்துளை குழாய் கிணறுகள், பூங்காக்கள் மற்றும் இதர இடங்களில் மழைநீர் சேகரிப்பு | 5.50 | திரு.G.விஜயகுமார்<br>M/s.வனஜா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.09 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.17 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தொட்டிகள் அமைத்தல். | | | |

அலுவலக குறிப்பு :–

அ) மேற்படி ஒவ்வொரு பணிகளுக்கும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1008 நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.8

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 12.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 8 | ராஜேஸ் கார்டன் மற்றும் சூசையா நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 11.00 | M/s.K.B. கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>திரு.M.கார்த்திக் | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு<br>5.89 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | 3 | கீழ்அயனம்பாக்கம் சாஸ்திரி தெரு மற்றும் நேரு தெருவிற்கு பேவர் பிளாக் வசதி செய்தல் | 28.00 | திரு.P.பாண்டுரங்கன்<br>திரு.G.இராமமூர்த்தி | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br>11.69 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | 3 | கீழ்அயனம்பாக்கம் சங்கர் சீலிங் தெரு மற்றும் ஏர்.ஆர்.கிருஷ்ணசாமி சாலை பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 21.00 | திரு.N.செல்வராஜ்<br>திரு.V.பார்த்திபன் | 0.12 % மதிப்பீட்டை விட குறைவு<br>8.70 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | 7 | ராஜீவ் நகர் காந்தி தெரு, ராஜீவ் நகர் லட்சுமி காந்தம்மாள் தெரு மற்றும் சொக்கலிங்கம் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 35.00 | M/s.MSM எண்டர்பிரைசஸ்<br>திரு.R.நிம்ரோட் | 0.08 % மதிப்பீட்டை விட குறைவு<br>7.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | 15 | ஈஸ்வரன் நகர் பிரதான சாலையில் பழுதடைந்த மழைநீர் வடிகால்வாயின் மூடுபலகைகள் பழுது பார்த்தல். | 25.00 | திரு.K.S.ஜனார்த்தனம்<br>திரு.P.ரகு | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br>4.03 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | 15 | செல்வ கணபதி நகர் 1வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 27.00 | M/s.கீதா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>திரு.A.M.ராஜகோபால் | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.74 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 7. | 17 | திவ்யா நகர் மற்றும் ராஜராஜேஸ்வரி நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் | 18.00 | திரு.P.ரகு<br>திரு.V.பார்த்திபன் | 0.11 % மதிப்பீட்டை விட குறைவு<br>8.70 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மூடுபலகைகள் அமைத்தல். | | | |
| 8. | 17 | TTS நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 25.00 | திரு.V.பார்த்திபன்<br><br>திரு.P.ரகு | 0.11 % மதிப்பீட்டை விட குறைவு<br>7.67 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி ஒவ்வொரு பணிகளுக்கும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1009 நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண்.9</u>**

இந்நகராட்சி சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி வாகன பதிவு எண்.TN 20 AS 4321 வாகனத்திற்கு FC (Fitness Certificate) முடிவடைந்துள்ளதால், வாகனத்தின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி தகுதிகாண் சான்று பெற வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள அதற்காக ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1010 நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண்.10</u>**

இந்நகராட்சி சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி வாகன பதிவு எண்.TN 20 L 5952 வாகனத்திற்கு FC (Fitness Certificate) முடிவடைந்துள்ளதால், வாகனத்தின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி தகுதிகாண் சான்று பெற வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள அதற்காக ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1011 நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண்.11</u>**

இந்நகராட்சியில் **12** மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் **49** இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் மூலம் திரவ குளோரினேசன் வசதிகள் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது திரவ குளோரினேசன் கையிருப்பு அளவு குறைவாக இருப்பதாலும், எதிர்வரவுள்ள வறட்சி காலத்தில் பொதுமக்களுக்கு சீரான குளோரினேசன் கலந்த குடிநீர் வழங்க தேவைக்கேற்ப திரவ குளோரினேசன் வாங்கிக்கொள்ளவும், அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**9.60** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
**நகர்மன்ற தீர்மான எண்.1012** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண்.12</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மேலும் நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் 10 எண்ணிக்கையிலும் மற்றும் பொது கழிப்பிடம் 1 எண்ணிக்கையிலும் உள்ளது. மேற்படி கழிப்பிடங்களில் துர்நாற்றம் வீசாமல் பொது மக்கள் நலன் கருதி பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி துர்நாற்றம் வீசாமல் இருக்கவும், தொற்று நோய்கள் பரவாமல் இருக்கவும் மேலும் பொதுக் கழிப்பறைகளை சுத்தம் செய்து பொது நலன் பேனவும் **லைசால்** எனும் கிருமி நாசினியை வாங்கி உபயோகப்படுத்தவும் இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மேலும் அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்று பதிவு செய்யவும் தகவலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.
**நகர்மன்ற தீர்மான எண்.1013** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண்.13</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள திறந்த வெயி கழிவுநீர் கால்வாய்களும், மூடப்படாத மழைநீர் கால்வாய்கள் உள்ளது. மேலும் நகரின் சில இடங்களில் பழைய கால்வாயின் அகலம் சிறியதாகவும் பழுதடைந்துள்ளது. கழிவுநீர் தெருவில் வழிந்தோடி அருகில் உள்ள காலிமனையில் தேங்கி நிற்பதால் கியூலக்ஸ் வகை கொசுக்கள் பெருக்கமடைந்து பொது சுகாதார கேடு ஏற்படுவதை தடுக்க BTI என்பவரும் (Bacillus Thuringiensis var. Israelensis) எனப்படும் பவுடர் கொண்ட கிருமி நாசினியை நீரில் கலந்து கைவிசை தெளிப்பான்கள் மூலம் தொடர்ந்து தெளித்துவர கொசுக்கள் நீரில் முட்டை இடுவதும், முட்டைகள் வளர்வது முற்றிலும் தடுக்கப்படும். எனவே பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி 300 கி.கி. BTI கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று வாங்கிகொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
ஆ) பொது நிதியின் கீழ் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**நகர்மன்ற தீர்மான எண்.1014** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண்.14</u>**

இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரகுடில்களில் சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி பசுமை உரக்குடில்களில் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை அரக்கோணம், நாவலூர் மற்றும் ரெட்ஹில்ஸ் ஆகிய பகுதிகளுக்கு தனியார் நிறுவனங்களில் திரவப்பொருளாக பயன்படுத்தப்படுவதால் மேற்படி நிறுவனங்களுக்கு எடுத்து செல்வதற்கும், தனியார் வாடகை வாகனம் மூலம் எடுத்து செல்ல ஒப்பந்தப்புள்ளி 14.02.2020 ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ | ஒப்பந்ததாரர் பெயர் | பணியின் விவரம் | நடை ஒன்றுக்கு |
|---|---|---|---|

| எண் | | | வாகனத்திற்கு வாடகை மற்றும் இதர செலவுகள் |
|---|---|---|---|
| 1 | என். செல்வராஜ்<br>25, சாஸ்திரி தெரு,<br>அயனம்பாக்கம்<br>சென்னை–77 | திருவேற்காடு நகராட்சி பகுதிகளிலிருந்து நாவலூர் தனியார் நிறுவனத்திற்கு வாடகை வாகனம் மூலம் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் எடுத்து செல்லுதல் பணி. | ரூ 8,500/– |
| 2 | வி. பார்திபன்<br>1/238, லீலாவதி நகர் விரிவு,<br>சிக்கராயபுரம் , செ–69. | | ரூ9,300/– |

**அலுவலக குறிப்பு:-**

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.என். செல்வராஜ், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேலும் பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1015** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.15

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது, தொடர்ந்து பொது சுகாதாரப் பணிகள் தடையேதும் ஏற்படாமல் பணி மேற்கொள்ளவும் 01.09.2019 முதல் ஆறு மாத காலத்திற்கு (28.02.2020) முடிவடைவதால் ஒப்பந்தப்புள்ளி கோரா காலதாமதமாகும் என்பதால் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி டிரக்டர் சப்ளை செய்யும் **M/s.ஈக்காடு வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிட்.,** மூலம் 5 எண்ணிக்கை 01.03.2020 முதல் 31.05.2020 வரை மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதப்படி சப்ளை செய்ய பணி நீட்டிப்பு செய்யவும் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1016** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.16

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது, தற்போது V.K contractors நிறுவனம் மூலம் 50 பணியாளர்கள் சப்ளை செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் பணி காலம் 05.03.2020 உடன் முடிவடைவதால் தொடர்ந்து பொது சுகாதாரப் பணிகள் தடையேதும் ஏற்படாமல் பணி மேற்கொள்ளவும் 06.03.2020 முதல் 05.06.2020 வரை மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதப்படி ஒப்பந்த விதிகளின்படி 50 பணியாளர்கள் சப்ளை செய்ய பணி நீட்டிப்பு செய்யவும் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம், மேலும் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்.1017 நாள்.28.02.2020

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

## பொருள் எண்.17

இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதி முழுவதும் பிரதான சாலைகளில் குப்பைகள் தினசரி சேகரம் செய்வதற்கு பணியாளர்களுக்கு தேவையான தளவாட பொருட்கள் சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரபொற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணியின் விவரம் பொது சுகாதாரம் | நடை ஒன்றுக்கு வாகனத்திற்கு வாடகை மற்றும் இதர செலவுகள் |
|---|---|---|---|
| 1 | R.S.R Enterprises<br>No.9/118 Gst Road,<br>Thilagavathy Nagar ,<br>Irumpuliyur,<br>EastThambaram<br>Chennai - 59. | பொது சுகாதாரம் நகராட்சி பகுதி முழுவதும் பிரதான சாலைகளில் குப்பைகள் தினசரி சேகரம் செய்வதற்கு பணியாளர்களுக்கு தேவையான தளவாட பொருட்கள் சப்ளை செய்தல் பணிக்கு. | மலார் 1 (Nos) – ரூ.370/–<br>மண் தள்ளும் பிராஷ் 1 (Nos) – ரூ.240/–<br>வாள் கத்தி 1 (Nos) – ரூ.360/–<br>தென்னந் துடப்பம் 1 (Nos) – ரூ.40/–<br>மண்வெட்டி 1 (Nos) – ரூ.520/–<br>சுண்ணாம்பு நீர் (1கிலோ) – ரூ.15/–<br>பிளிச்சிங் பவுடர் (1கிலோ) – ரூ.45/– |
| 2 | Balaji Associates<br>No. 208 Perumal Kovil<br>Street Irumpuliyur,<br>West Thambaram<br>Chennai - 45. | | மலார் 1 (Nos) – ரூ.410/–<br>மண் தள்ளும் பிராஷ் 1 (Nos) – ரூ.275/–<br>வாள் கத்தி 1 (Nos) – ரூ.390/–<br>தென்னந் துடப்பம் 1 (Nos) – ரூ.48/–<br>மண்வெட்டி 1 (Nos) – ரூ.570/–<br>சுண்ணாம்பு நீர் (1கிலோ) – ரூ.21/–<br>பிளிச்சிங் பவுடர் (1கிலோ) – ரூ.52/– |
| 3 | Kiruthiik Associates<br>No. 13/3 Dharmathottam<br>Street. Irumpuliyur,<br>West Thambaram<br>Chennai - 45. | | மலார் 1 (Nos) – ரூ.450/–<br>மண் தள்ளும் பிராஷ் 1 (Nos) – ரூ.320/–<br>வாள் கத்தி 1 (Nos) – ரூ.450/–<br>தென்னந் துடப்பம் 1 (Nos) – ரூ.55/–<br>மண்வெட்டி 1 (Nos) – ரூ.610/–<br>சுண்ணாம்பு நீர் (1கிலோ) – ரூ.24/–<br>பிளிச்சிங் பவுடர் (1கிலோ) – ரூ.55/– |

**அலுவலக குறிப்பு:-**

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய R.S.R Enterprises நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும், மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகர்மன்ற தீர்மான எண்.1018 நாள்.28.02.2020

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

---

## பொருள் எண்.18

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியின் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289 தற்போது மக்கள் தொகை சுமார் 98000 கொண்டுள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் ஆகும். மேற்படி பகுதிகளில் குப்பைகள் தினசரி சேகரம் செய்யப்படும் அளவு 28.82 மெட்ரிக் டன் அளவாகும். சேகரம் செய்யப்படும் குப்பைகள் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரக்குடில்களில் சேகரம் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேற்படி பசுமை உரக்குடில்களில் மக்கும் தன்மை கொண்ட குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், ஒரு பசுமை உரக்குடிலுக்கு மூன்று பணியாளர்கள் வீதம் 5 பசுமை உரக்குடிலுக்கு மொத்தம் 15 பணியாளர்களை 4 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில்

பணியமர்த்திகொள்ளவும் மற்றும் அப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கும் தினக்கூலி விலைவிகித்திக்படி ஊதியம் வழங்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.9.50/— இலட்சத்திற்கு பொதுநிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1019 நாள்.28.02.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.19**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ள வார்டு எண்.2, 8, 11 மற்றும் 12 ஆகிய பகுதிகளில் பொது மக்களின் வசதிக்காக புதிய தெருமின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள தெருமின் விளக்குகளுக்கு தேவையான மும்முனை மின்இணைப்பு (3 Phase Line) வேண்டி விண்ணப்பத்தினை உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சமர்பித்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண். | பகுதி | மின்வாரிய அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | 2 | பாடசாலை தெரு | அயனம்பாக்கம் |
| 2. | 8 | ஜட்ஜஸ் காலனி | புளியம்பேடு |
| 3. | 11 | கோ–ஆப்ரேடிவ் நகர் | வேலப்பன்சாவடி |
| 4. | 11 | காவேரி நகர் | வேலப்பன்சாவடி |
| 5. | 12 | அம்மன் நகர் | திருவேற்காடு |

**அலுவலக குறிப்பு :-**

**அ)** அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1020** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.20**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் அலுவலகத்திற்கு தேவையான கணினி, பிரின்டர்கள் மற்றும் அது தொடர்பான தளவாட பொருட்களை புதியதாக வாங்கி அனுப்பி வைத்திட இந்நகர்மன்ற தீர்மான எண்.994, நாள்.30.01.2020–ன்படி அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து,மேற்கண்ட பொருட்களை வாங்கி கொள்ள அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களின் மூலம் (DGS&D or GEM Price) முறையில் வாங்கி கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** மேற்கண்ட உயர் அலுவலர்களின் உத்திரவின்படியும் மற்றும் அலுவலக பணியின் அவசர அவசியத்தினை கருதி மேற்படி பணியினை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களின் மூலம் (DGS&D or GEM Price) முறையில் வாங்கி உரிய அனுமதியுடன் அனுப்பி வைத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1021** **நாள்.28.02.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண்.21</u>**

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 28.50 சதுர கிலோ உள்ளடக்கியதாலும், சுமார் 22739 வரி விதிப்புகளை கொண்டுள்ள சென்னை மாநகராட்சி எல்லையினை ஒட்டியுள்ள நகராட்சியாகவும் உள்ளது. இணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ந.க.எண்.20557/தேர்தல்/2014–1 நாள்.16.06.2004–ன்படி திருவேற்காடு பேரூராட்சியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர், அரசாணை எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2010–ன்படி மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திருவேற்காடு நகராட்சியின் நிர்வாக பணிக்கு தேவையான வருவாயினையும், சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் இதர வரியினங்களை வசூலிப்பதற்கும் மேலும் வருவாய் பிரிவு தொடர்பான பணிகள், அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் திட்டங்களை செயல்படுத்திடவும், நகராட்சியின் நிர்வாக திறனை மேம்படுத்திடவும், மேலும் நகர பொது மக்களின் அத்தியாவசிய அடிப்படை தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றம் செய்வது தொடர்பான பணிகள்யாவும் வருவாய் உதவியாளர்களை கொண்டு தான் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்நகராட்சியில் தற்போது தேர்வு நிலை நகராட்சியாகவுள்ளது. மேலும், நகராட்சியின் தரத்திற்கேற்பவும் மற்றும் அரசு வழிகாட்டுதல்கள் மற்றும் அளவு கோலின்படி (Norms) தேர்வு நிலை நகராட்சிக்கு 3000 வரி விதிப்பிற்கு ஒரு வருவாய் உதவியாளர் பணியிடம் என்ற அளவீடுகள் உள்ளதாலும், இதன்படி 7 வருவாய் உதவியாளர் பணியிடங்கள் வேண்டிய நிலையில் இந்நகராட்சிக்கு இரண்டு வருவாய் உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

இதனை மேற்கொண்டு நகராட்சியில் அத்தியாவசிய பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கு அரசாணை எண்.30, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME1) நாள்.13.02.2013–ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதல் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் இந்நகராட்சிக்கு ஐந்து வருவாய் உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கவும் மற்றும் அனுமதி வழங்கவும், அரசிற்கு கருத்துருகள் அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

திருவேற்காடு நகராட்சிக்கு அத்தியாவசிய பணியிடமான ஐந்து வருவாய் உதவியாளர் பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்க அரசிற்கு கருத்துருகள் சமர்பிக்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

(ஒம்) தனி அலுவலர் (ம) ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி

// உண்மை நகல்//

ஆணையர்
திருவேற்காடு நகராட்சி
சென்னை 77.